1969 மார்ச் 10]

திரு. கே. விநாயகம் : எல்லாம் ஒன்றுதான், பெரந்திலிஸ்தான்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மெரினு போட் பில்டிங் யார்டை இன்னெரு இடத்திற்கு, அதாவது எண்ணூருக்கு மாற்றுவதாக அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. கனம் உறுப்பினர் அங்கே மீனவர்கள் வாழ்வதாகச் சொன்னார்கள். அந்த போட் பில்டிங் யார்டிலே மீனவர்கள் வாழ்வதாகத் தெரியவில்லை. எண்ணூரிலே அதிக செலவாகும் என்ற காரணத்தினாலே தற்காலிகமாக ராயபுரத்திற்கு மாற்றுவதாக அரசாங்கம் இருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேலை இழப்பு நிச்சயமாக ஏற்படாது.

Expansion of Madras Harbour.

*254 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether the Government are aware that the expansion of Madras Harbour on the northern side will affect the landing of the marine catches, beaching of catamarans and country boats, mending and drying of nets by the fishermen of Royapuram ; and

(*b*) if so, the steps taken to protect the rights of age-old fishermen ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) ராயபுரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கும் கட்டுமரங்களையும் நாட்டுப் படகுகளையும் கரையில் கொண்டுவந்து சேர்ப்பதற்கும், வலைகளை உலர்த்துவதற்கும் பழுது பார்ப்பதற்கும், பயன்படுத்துவதற்காக மாற்று நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. விசைப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு தமிழ்நாடு துறைமுகப் பொறுப்பாணைக் கழகத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மீனவர்களுக்கு மீனளத்துறை இயக்குநரிடமிருந்து போதிய நிதி உதவி கிடைக்கும்.

திரு. கே. விநாயகம் : ராயபுரத்திலே பழம் காலத்திலிருந்தே மீனவர்கள் அதைப் பயன்படுத்தி வந்தார்கள். அங்கிருப்பதை அகற்றக் கூடாது என்று அரசாங்கத்திற்கு அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்களா ? அந்தக் கோரிக்கைமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இப்பொழுது இருப்பதை எந்த இடத்திற்கு மாற்றுகிறார்கள் ? அந்த இடம் எவ்வளவு தூரம் இருக்கிறது ராயபுரத்திலிருந்து ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுதுள்ள துறைமுகத்தை வட பகுதிக்கு எக்ஸ்டெண்ட் செய்கிற முறையிலே எண்ணெய்க் கப்பல்களிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு ஏற்ற முறையிலே வசதியாக இருக்கும் பொருட்டு விஸ்தரிப்புச் செய்யப்படுகிறது. அங்குள்ள மீனவர்கள் அதற்கு ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். ஆனால் மாற்று இடம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த 200 குடும்பங்களுக்கு புது வாழ்வு அளிக்கின்ற வகையிலே 1,000 ரூபாய் வழங்க தமிழ்நாடு மீனளக் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது. மீனளத் துறை இயக்குநருக்கு 2 இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற வகையில் காசிமேடு, புதுமனைக்குப்பம் போன்ற பகுதிகளில் படகுகளை நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விசைப் படகுகளை ஹார்பரிலேயே நிறுத்துவதற்கு வேண்டிய வசதிகளும் செய்யப்படுகின்றன.

DR. H. V. HANDE : In answer to the main question, the Hon. Minister said that the harbour is going to be extended to the northern side. What are the number of berths available in the entire harbour and how many extra berths are going to be created in the northern side and may I know whether this will be coming

very close to the fishing harbour in connection with the inauguration of which the Hon. Minister presided over yesterday? May I also know whether these people will be given alternative sites very close to the fishing harbour?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அவர்களுக்கு வேண்டிய இட வசதி காசிமேடு, புதுமனைக் குப்பம் பகுதியில் செய்து தரப்பட்டிருக்கிறது. எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு வசதியாக இந்தத் திட்டம் வருகின்றபோது அங்கே வாழ்கின்ற மீனவர்கள் தங்களுடைய கஷ்டங்களை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மீனவத் தலைவர்களை அழைத்து இயக்குநர் அவர்கள் பேசி ஒரு முடிவைக் கண்டிருக்கிறார்கள்.

உறப்பனூர் கண்மாயில் மீன் பிடிப்பு

* 255 வினா : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் அருகே உள்ள உறப்பனூர் கண்மாயில் மீன் பிடிப்பதில் தகராறு ஏற்பட்டதை யொட்டி யாரும் மீன் பிடிக்க அனுமதிக்கப் படுவது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், முன்போல் பொது மக்கள் மீன் பிடித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) இந்த ஏரியில் மீன் பிடிப்பதைத் தடை செய்து எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் அமைதி குலைவதைத் தடுக்கவும் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைபெறச் செய்யவும் 1965, 1966, 1967 ஆண்டுகளில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 144 வது பிரிவின் கீழ் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டு காவல் படை பாதுகாப்புக்கும் வகை செய்யப்பட்டது.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : இப்போது நாட்டிலே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. இப்போது குளங்களில் உள்ள மீன்களைப் பிடித்துவிட்டால் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாகிவிடாதா ? ஆகவே, வறட்சியின் காரணமாக குளங்களில் மீன் பிடிப்பது நிறுத்தி வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : குளங்களிலுள்ள அந்த மீன்களைப் பிடிக்கவில்லை யென்றால் காகங்களும், கழுகுகளும் எடுத்துச் சென்றுவிடும். இந்த உணவு நெருக்கடி சமயத்தில் மீனைப் பிடித்துச் சாப்பிட்டு ஓரளவு சமாளிக்க முடியுமென்ற காரணத்தால் கனம். உறுப்பினர் அவர்கள் மீன் பிடிப்பதை எதிர்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு பி. வேலுசாமி : மீன் வளத்திற்காக ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. கோவை ஜில்லாவில் தண்ணீரே கிடையாது. தண்ணீர் இல்லாத அந்தப் பகுதியில் மீன் வளத்துறை என்ன செய்கிறது? அவர்களுக்கு ஏதாவது புதிய வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது சும்மா இருந்துகொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தண்ணீர் இல்லாத போது மீனும் அங்கிருப்பதற்கு நியாயம் இல்லை. உறப்பனூர் பற்றிய கேள்வியிலே கனம் அங்கத்தினர் அவர்கள் கோயம்புத்தூருக்குப் போய்விட்டார்கள்.

தாராபுரத்தில் புதைச் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 256 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

தாராபுரம் நகரத்தில் underground drainage system அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?